எங்கேயும்...எப்போதும்...
தமிழன் ராஜ்ஜியம்
டிஜிட்டல் டெய்லி
Vol:01
Issue: 26
23.04.2025
புதன்கிழமை
* 28 பக்கங்கள்

# பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் வன்னியர் சங்க பொதுக்குழு கூட்டம்




**நாமக்கல், ஏப்ரல் 23:** ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட பாமக மற்றும் வன்னியர் சங்க பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட. உழவர் பேரியக்கம் மாநில துணை தலைவர் பொன் ரமேஷ். மாநில வன்னியர் சங்க செயலாளர் தங்க அய்யாசாமி மற்றும் வன்னியர் சங்க மாநில தலைவர்.பு.தா. அருண்மொழி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். மாமல்லபுரத்தில் நடைபெறும் இந்த மாநாட்டிற்கு நம் இன சொந்தங்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் எனவும். வேறு கட்சியில் இருக்கும் நமது வன்னியர் இன பொது மக்களையும் இந்த மாநாட்டிற்கு அழைத்து வர வேண்டும் எனவும் வன்னியர் சங்கத்தின் பலத்தை காட்ட இது ஒரு நல்ல தருணமாக அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன நாமக்கல் மாவட்டத்தில் 24 மணி நேரமும் சந்து கடை மற்றும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனையை உடனடியாக மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை தடுக்க வேண்டும் எனவும் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




இந்த நிகழ்ச்சிகள். மாவட்ட செயலாளர் வக்கீல் ரமேஷ் சுதாகர் ஓ பி பொன்னுசாமி. மற்றும் மாநில பசுமை தாயத்தின் செயலாளர் வெங்கடாசலம். ஈரோடு மாவட்ட செயலாளர் மனோகரன். நாமக்கல் மாவட்ட வன்னீர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன். மோகன்ராஜ். மாவட்ட துணை செயலாளர் சரவணன் ஸ்ரீதர். மாவட்டத் தலைவர்கள் தினேஷ் பாண்டியன் மூர்த்தி. மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள், ஒன்றிய, நகர மாவட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

---



தமிழ் சிந்தனைப் பேரவை மற்றும் ஸ்ரீ யோகேஷ் ஜோதிட ஆன்மீக அறக்கட்டளை இணைந்து 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று குமாரபாளையம் தேவாங்கர் சமுதாய கூடத்தில் நடத்தும் நான்காம் ஆண்டு குருப்பெயர்ச்சி வேள்வி, ஆன்மீக ஜோதிட இலக்கியக் கருத்தரங்கம், பட்டிமன்றம் மற்றும் 12 துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கும் விழா அழைப்பிதழை பள்ளிபாளையம் மகரிஷி சேவா அறக்கட்டளை, ஸ்டார் ஜோதிட குழு ராஜா சங்கர், சந்திரசேகர் ஆகியோருக்கு வழங்கினர்.

# சேந்தமங்கலம் வளர்ச்சித்திட்டப் பணிகளை ஆட்சியர் ஆய்வு



**நாமக்கல், ஏப்ரல் 23:** நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், திருமலைப்பட்டி, உத்திரகிடிகாவல் ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

சேந்தமங்கலம் வட்டம், திருமலைப்பட்டி ஊராட்சி, எடையபட்டியில் ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) திட்டத்தின் கீழ், சமுதாயக்கூடம் அமைக்க இடம் தேர்வு செய்வது குறித்து நிலத்தின் வகைப்பாடு, புல விபரம், நிலத்தின் பதிவேடுகள் மற்றும் வரைபடம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, உத்திரகிடிகாவல் ஊராட்சி, சேந்தமங்கலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அருகில் பழங்குடியினர் நலத்துறை சார்பில், பழங்குடியின நல மாணவியர் விடுதி மற்றும் சேந்தமங்கலம் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்வது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, உத்திரகிடிகாவல் ஊராட்சியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், ரூ.4.96 கோடி மதிப்பில் 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய வட்ட செயல்முறை கிடங்கு அமைக்கும் பணி நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு கட்டுமானப் பணிகளை ஒப்பந்த காலத்திற்குள் முடிக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



மேலும், சேந்தமங்கலம் வட்டம், பொம்மசமுத்திரம் கிராமத்தில் வீட்டுமனை பட்டா வழங்கும் சிறப்புத் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருந்த நபர்களின் குடியிருப்புகளுக்கு நேரில் சென்று குடியிருப்புவாசிகளிடம், நீண்ட வருடங்களாக வசிப்பதற்கான வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ரசீது, மற்றும் வருமான வரம்பு உள்ளிட்ட ஆவணங்களை சரி பார்த்து ஆய்வு மேற்கொண்டார். ஆவணங்கள் சரியாக இருப்பின் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா தெரிவித்தார்.



# ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் தொடங்கக் கோரி

# லாரி உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம்






**பரமத்திவேலூர், ஏப்ரல் 23:** ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் தொடங்க வேண்டும் என லாரி உரிமையாளர்கள் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுக்கா லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் ஸ்டெர்லைட் காப்பர் நிறுவனத்தின் செயல்பாடுகளின் போது சரக்கு மற்றும் ட்ரையலர் வாகனங்கள் முதன்மை வழங்குநர்களாக இருந்த வந்தனர். சரக்கு போக்குவரத்தில் தொடர்ந்து நீடித்து வரும் கடும் வீழ்ச்சியை சீரமைக்க வலியுறுத்தி போராட்டம் நடத்தினர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்டெர்லைட் ஆலையை கண்டித்து அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் தற்காலிகமாக மூடுவதாக அந்நிறுவனம் அறிவித்தது. ஆலை

மூடப்பட்டதால் தமிழகம், கேரளா, ஆந்திரா, தெலுங்கானா மற்றும் கர்நாடக மாநில லாரி ஓட்டுநர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் கடுமையான தொழில் பாதிப்பு ஏற்பட்டது.

ஆலையின் செயல்பாட்டின் போது தினசரி 1000 லாரிகள் இயக்கப்பட்டு முக்கிய வாழ்வாதாரத்தை வழங்கி வந்தது. இந்நிலையில் 600 க்கு மேற்பட்ட லாரி உரிமையாளர்கள் தாங்களுக்கு வேறுவழியின்றி ஓட்டுநர்களாக மாறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டதாக தெரிவித்தனர். இதில் ஓட்டுநர்கள், உதவியாளர்கள், மற்றும் அவர்களது குடும்பத்தினர் வேலையில்லா திண்டாட்டத்தாலும், பல்வேறு தொடர் தொழில்கள் மூடப்படுவதால் நிதி நெறுக்காடியாலும் வாழ்கை சுமையை தாங்கமுடியாமல் போராடி வருகின்றனர்.

பொருளாதார இழப்புகள்: ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டுள்ளதால் மாவட்டத்தில் தினசரி ரூ.10 கோடிக்கு மேல் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஆயிரக்கணக்கானோருக்கு கடனாளியாகி உள்ளதாகம், மெக்கானிக் கடைகள், டீ கடைகள் மற்றும் பஞ்சர் பழுது பார்க்கும் கடைகள் போன்ற சிறு சிறு வணிகங்கள் குறைந்த போக்குவரத்து நடவடிக்கையால் குறிப்பிடதக்க வருமான இழப்பை சநதித்து வருகின்றன.

தொடந்து சரக்கு இயக்கத்தில் ஒரு நிலையான சரிவு, நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள், போக்குவரத்து பரிவர்த்தனை குறைவு மற்றும் குறைந்த வருமானம், சரக்கு கட்டணங்கள் குறைவு ஆகியவை தொடர்வதால் தொழில் துறை வருவாய் இழப்பு அதிகரித்து வருகிறது.

குறைக்கப்பட்ட சரக்கு போக்குவரத்து சேவைகள் மூலம் மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம் மற்றும் நிலையான தொழில் பரிவர்த்தனை ஆகியவற்றை நம்பியிருக்கும் தொழில்களுக்கு இடையறு ஏற்படுத்தி, வருவாய் குறைவையும், பாதிக்கப்படும் சூழலை உருவாக்கியுள்ளது.

ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு தவறான தகவல் திட்டமிட்டு பரப்பபட்டது அல்லது கண்ணுக்குத் தெரியாத சில தீய சக்திகளின் அழுத்தங்கள் காரணமாக இருக்கலாம் என பரமத்தி வேலூர் தாலுக்கா லாரி உரிமையாளர்கள் சங்கம் தொரிவித்துள்ளது. இதனால் ஆலையை மீண்டும் அரசே ஏற்று இயக்கி ஆலையின் செயல்பாடுகளைக் கண்காணிக்க நிபுணர் குழுவை அமைத்து

ஆலையை மீண்டும் திறக்கவேண்டும் என்று தமிழக அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் பாதிப்புகளைக் குறைக்க மேம்பட்ட தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஆலையை கடுமையான மேற்பார்வை குழுவின் கீழ் இயக்க செய்து அதற்க்கு ஒரு சிறப்பு அரசு ஆணை (நிளி) இயற்றப்பட வேண்டும். ஸ்டெர்லைட் ஆலை மூடல் என்பது போக்குவரத்து துறையை மட்டுமல்ல மாவட்டத்தில் உள்ளூர் பொருளாதாரத்தையும் சீர்குலைத்துள்ளது.

ஏறக்குறைய 6500 லாரிகள் ஆலையின் செயல்பாடுகளை நம்பியிருந்த நிலையில் ஸ்டெர்லைட் காப்பர் உற்பத்தி செய்யும் கிட்டத்தட்ட 9000 டன் பொருட்களை கொண்டு செல்ல தினசரி 430 லாரிகள் தேவைப்படும் நிலை இருந்து வந்துள்ளது. தற்போதைய ஆலை மூடல் நிலை என்பது ஆயிரக்கணக்கான குடும்பங்களையும் அவற்றின் வளர்ச்சி மற்றும் பொருளாதார காரணிகளை அழித்துள்ளதுடன் கடுமையான இழப்புகளை நீண்ட காலமாக ஏற்படுத்தியுள்ளது.

ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறப்பது என்பது லாரி ஓட்டுநர்கள், உதவியாளர்கள் மற்றும் உள்ளூர் வணிகர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும். இது தவிர பொருளாதாரத்தை உயர்த்தும் மற்றும் மாநில வாருவாயில் கணிசமாக பங்களிக்கும், ஆலையை புதுப்பிக்கவும், உலக அளவில் தாமிர சரக்கு தேவையை மீட்டெடுக்கவும், தளவாடங்கள் மற்றும் உள்ளூர் பொருளாதாரங்கள் மேலும் சேதமடைவதை தடுக்கவும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரமத்தி வேலூர் தாலுக்கா லாரி உரிமையாளர்கள் சங்கம் வலியுறுதுகிறது.

உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் லாரி உரிமையாளர்கள்,ஓட்டுநர்கள்,உதவியாளர்கள், உட்பட அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

HAKIM CARE & CURE
(Acupuncture & Foot Reflexology, Hijama, Dorn)
அக்குபஞ்சர் - இயற்கை பாத அழுத்த சிகிச்சை, ஹிஜாமா, டான்

# சிங்கப்பூரில் “தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! நிகழ்ச்சி




**சிங்கப்பூர், ஏப்ரல் 23:** சிங்கப்பூர் தமிழ்மொழி விழா 2025ன் ஓர் அங்கமாக வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)யின் ஏற்பாட்டில், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய உள்ளரங்கில் “தமிழ் எங்கள் இளமைக்குப் பால்!” எனும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழாசிரியரும் சிறந்தப் பேச்சாளருமான விஜய் தொலைக்காட்சி புகழ் கவிஞர் ஜோ. அருள் பிரகாஷ் தமிழின் இளமையைக் கருப்பொருளாய் கொண்டு சிறப்புரையாற்றினார். சிங்கப்பூர் நாடாளுமன்ற முன்னாள் நியமன உறுப்பினர் மருத்துவர் சையத் ஹாருன் அல்ஹாப்சி தாய்மொழியின் அவசியத்தை வலியுறுத்திப் பேசியத்தோடு, கடந்த 15 ஆண்டுகளில் இதுவரை 144 நிகழ்ச்சிகள் நடத்தி சாதனைப் படைத்திருக்கும் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) ஆற்றி வரும் கல்வி சார்ந்த சமூக நல பணிகளைப் பாராட்டினார்.

வரவேற்புரை வழங்கிய சங்கத்தின் தலைவர், பட்டயக் கணக்காளர் முனைவர் மு. அ. காதர், இந்த ஆண்டு இறுதியில் சங்கத்தின் 15ஆம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடவிருப்பதாக அறிவித்தார். சங்கத்தின் செயலவை உறுப்பினரும், பட்டிமன்றப் பேச்சாளருமான அப்துல் மாலிக் வழிநடத்த, “தமிழும்





இளமையும்" என்ற தலைப்பில் மாணவர் அங்கம் இடம் பெற்றது. இதில் மாணவ மாணவிகள் இஷாக் இப்ராஹிம், ஆமினா ஜுனைரா, ஸ்ரீநிதி ரெங்கபிரசாத் ஆகியோரும், பெற்றோர்கள் கோ.ரெங்கபிரசாத் மற்றும் சாரதாமணியும் கலந்துகொண்டனர்.

மூத்த ஊடகவியலாளர் திரு. முஹம்மது அலி தமிழ்மொழியின் சிறப்புகளைப் பற்றி சிற்றுரையாற்றினார். இசை மணி பரசு கல்யாண் மற்றும் அவரது மாணவ, மாணவிகளான ஷ்ருதி கார்த்திக், சாய் காத்யாயனி, பரசுராமன் ஷாய் சித்தாந்த், பரசுராமன் ஷாய் வேதாந்த், வியாசன் வெங்கடேஷ், இஷான் கார்த்திக், அக்ஷரா கார்த்திக் ஆகியோர் "அமுதே தமிழே!" என்ற பாடலை குழுவாக இணைந்துப் பாடினர்.

ஸ்ரீ நாராயண மிஷன் சிங்கப்பூர் அற நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எஸ். தேவேந்திரனின் 40 ஆண்டு கால சமூக சேவையைப் பாராட்டி உயரிய "ஜமாலியன் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

GCE O நிலைத் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்றதற்காக யீ சூன் டவுன் உயர்நிலைப் பள்ளி மாணவர் அப்துல் ரஹ்மானுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை சங்கத்தின் செயலவை உறுப்பினர் ரியாஜ் வழிநடத்தினார். சமூகத் தலைவர்கள், தமிழ் ஆர்வலர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், சங்க உறுப்பினர்கள் உட்பட சுமார் 300 பேர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

# ஜாக்டோ ஜியோ சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




**நாமக்கல், ஏப்ரல் 23:** நாமக்கல் பூங்கா சாலையில் ஜாக்டோ ஜியோ அமைப்பின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டு 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காடுக்கு மேலாக உள்ள காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் 21 மாத ஊதியமற்ற நிலுவைத் தொகையை ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# உலக பூமி தின விழிப்புணர்வு நிகழ்ச்சி




**நாமக்கல், ஏப்ரல் 23:** நாமக்கல் மாநகராட்சி சார்பில் உலக பூமி தினத்தை முன்னிட்டு பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. ஒவ்வொரு ஆண்டும் ஏப். 22 ஆம் தேதி உலக பூமி தினம் கொண்டாடப்படுகிறது.




இதையொட்டி நாமக்கல் மாநகராட்சி ஆணையர் சிவகுமார் ஏற்பாட்டின் பேரில், மாநகராட்சி மற்றும் தேசிய பசுமைப்படை இணைந்து, நாமக்கல் உழவர் சந்தையில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தாமல் மஞ்சப்பை பயன்படுத்த பொது மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் உறுதிமொழி ஏற்கப்பட்டது. தொடர்ந்து பொதுமக்களுக்கு மஞ்சப்பை வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாநகராட்சி துப்புரவு அலுவலர் திருமூர்த்தி, கவுன்சிலர்கள் நந்தினிதேவி, கிருஷ்ணமூர்த்தி, தேசிய பசுமைப் படை நாமக்கல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரகுநாத், துப்புரவு ஆய்வாளர்கள் செல்வகுமார், பாஸ்கர், ஜான்ராஜா மற்றும் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் கலந்துகொண்டனர்"



# கள்ள லாட்டரி விற்பனையைத் தடை செய்யக்கோரி

# லோக் ஜன சக்தி ஆர்ப்பாட்டம்



**நாமக்கல், ஏப்ரல் 23:** நாமக்கல் மாவட்டத்தில், கள்ள லாட்டரி விற்பனையில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு லோக் ஜனசக்தி கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

லோக் ஜனசக்தி கட்சியின் நாமக்கல் கிழக்கு மாவட்ட தலைவர் பிரபு ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை வகித்தார். மேற்கு மாவட்டத் தலைவர் முருகேசன் முன்னிலை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் ஆதவன் பங்கேற்றுப் பேசினார்.

தொடர்ந்து நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிபாளையம், குமாரபாளையம், திருச்செங்கோடு உட்பட மாவட்டம் முழுவதும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கள்ள லாட்டரி சீட்டு விற்பனை அமோகமாக நடைபெறுகிறது. லாட்டரி சீட்டுகளே இல்லாமல் வெறும் வெள்ளைத்தாளில் நம்பர் எழுதி லாட்டரி விற்பனை நடைபெறுகிறது.

இதனால் ஆயிரக்கணக்கான கூலித்தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனை தடுக்க போலீசார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். கள்ள லாட்டரி விற்பனை செய்வோரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# பனை தென்னை பாதுகாப்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




**திருச்சங்கோடு, ஏப்ரல் 23:** தமிழ்நாடு கள் இயக்கத்தின் சார்பில் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே பனை, தென்னை பாதுகாப்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கரும்பு விவசாயிகள், சங்க நிர்வாகி நல்லைய கவுண்டர், கொல்லப்பட்டி விவசாயி, சமூக ஆர்வலர் நடேசன், கம்யூனிஸ்ட் கட்சி விவசாயிகள் சங்க நிர்வாகி ஆதிநாராயணன் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கள் கடையை தமிழ்நாடு அரசு உடனடியாக நீக்க வேண்டும்.

கள்ளுக்கு தடையும் வேண்டாம், கடையும் வேண்டாம். கள்ளை உணவாக ஏற்க வேண்டும். பீகாரில் உள்ளதைப் போல் இறக்குமதி மது, இந்திய தயாரிப்பு அயல் நாட்டு மதுவிற்குத் தடை விதித்து கள்ளுக்கு பூரணமது விலக்கு கொண்டுவரப்பட்டுள்ளது போல் தமிழகத்திலும் நடைமுறைப்படுத்த வேண்டும். நிபந்தனைகளை முற்றிலுமாக நீக்கி சந்தைப்படுத்துவதை சாத்தியமாக்க வேண்டும்.

நீதியரசர் சிவசுப்பிரமணியம் குழுவின் அறிக்கையை தமிழ்நாடு அரசு காலம் தாழ்த்தாமல் வெளியிட வேண்டும், தென்னை விவசாயிகள் நல வாரியம் புதுப்பிக்கப்பட வேண்டும், தென்னை யைத் தாக்கியிருக்கும் ருக்கோஸ் சுருள் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்திட மத்திய மாநில அரசுகள் போர்க்கால அடிப்படையில்




தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

---

# மோகனூர் மாரியம்மன் திருவிழா

## பக்தர்கள் நேர்த்திக்கடன்



**நாமக்கல், ஏப்ரல் 23:** மோகனூர் அருள்மிகு மாரியம்மன் கோயில் திருவிழாவில் திரளான பக்தர்கள் தீக்குண்டம் இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தினர்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் நகரில் பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலில், ஆண்டு

தோறும் சித்திரை மாதம் திருவிழா விமரிசையாக நடைபெறும்.

இந்த ஆண்டு திருவிழா கடந்த 7ம் தேதி இரவு கம்பம் நட்டு காப்பு கட்டுதலுடன் துவங்கியது. தொடர்ந்து, தினசரி அதிகாலை 5 மணி முதல், பக்தர்கள் காவிரி ஆற்றுக்கு சென்று புனித நீராடி தீர்த்தம் எடுத்து வந்து அபிஷேகம் செய்தனர். அம்மனுக்கு வடி சோறு வைத்து படையல் படைக்கப்பட்டது. பின்னர் நேற்று காலை தீக்குண்டம் வைக்கப்பட்டது.

பக்தர்கள் அலகு குத்தியும், தீக்குண்டம் இறங்கியும் தங்கள் நேர்த்திக் கடனைச் செலுத்தினர்.



# மின் கம்பங்களை சாலை ஓரமாக அமைக்க மக்கள் நீதி மய்யம் மனு



**குமாரபாளையம், ஏப்ரல் 23:** குமாரபாளையத்தில் பிரதான சேலம் சாலையில் நடுவில் உள்ள மின் கம்பங்களை சாலை ஓரமாக அமைக்க கோரியும், ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரியும் மாவட்ட ஆட்சியரிடம் மக்கள் நீதி மையம் சார்பில், மண்டல தலைவர் காமராஜ் தலைமையில் மனு கொடுக்கப்பட்டது.

குமாரபாளையம் அருகே, சேலம் கோவை புறவழிச்சாலை, கத்தேரி பிரிவு பகுதியிலிருந்து, குமாரபாளையம் நகரம், பள்ளிபாளையம் பிரிவு பகுதி வரை, சாலையின் நடுவில் மின் கம்பங்கள் அதிக அளவில் உள்ளன.

சாலையின் இருபுறமும், சாலையின் நடுவே உள்ள மின்சார கம்பங்களை அகற்றி, சாலை ஓரங்களில் அமைக்க வேண்டியும், சாலையின் இரு புறமும் அமைக்கப்பட்டுள்ள நிரந்தர ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரியும், மக்கள் நீதி மய்யத்தின் சார்பாக சேலம் மண்டல செயலாளர் காமராஜ் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கப்பட்டது. குமாரபாளையம் நகர செயலாளர் மனோகரன், நற்பணி அணி மாவட்ட அமைப்பாளர் வெங்கடேஷ், மாவட்டத் துணைச் செயலாளர் மகுடேஸ்வரன், நிர்வாகிகள் ராஜா, தவமணி உள்பட பலர் பங்கேற்றனர்.

# புகையிலை பொருட்கள் விற்றவர்கள் கைது




**குமாரபாளையம், ஏப்ரல் 23:** குமாரபாளையத்தில் புகையிலைப் பொருட்கள் விற்ற நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். குமார பாளையத்தில் புகையிலைப் பொருட்கள் விற்பதாக குமாரபாளையம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, காவல் ஆய்வாளர் தவமணி, உதவி காவல் ஆய்வாளர் தங்கவடிவேல் தலைமையில் தீவிர ரோந்து பணி மேற்கொண்டனர்.

வட்டமலை பகுதியில் புகையிலை பொருட்கள் விற்பதாக அறிந்து, நேரில் சென்றனர். அங்கு புகையிலை பொருட்கள் விற்றுக்கொண்டிருந்த நாராயணசாமி, (56), முத்துலட்சுமி, (66) ஆகிய இருவரை போலீசார் கைது செய்து, தலா 5 புகையிலைப் பொருள் பொட்டலங்களைப் பறிமுதல் செய்தனர். இது குறித்து குமாரபாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகிறார்கள்.

# ஓட்டுனர் மர்மமான முறையில் உயிரிழப்பு

## உறவினர்கள் போராட்டம்






**திருச்செங்கோடு, ஏப்ரல் 23:** திருச்செங்கோடு அடுத்த வட்டூர் ஊராட்சி வேலனம்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் செந்தில்குமார் (46) இவருக்கு சவிதா என்ற மனைவியும் கோகுல் (22)

மௌனிஷ் (19) என்ற இரு மகன்கள் உள்ளனர். செந்தில்குமார் கடந்த 17 வருடங்களாக சுபம் போர்வெல் நிறுவனத்தில்ரிக் டிரைவராக வேலை பார்த்து வருகிறார்.

இந்த நிலையில் ஆழ்துளைக் கிணறு அமைக்க ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டம் புலி வந்தனா பகுதிக்கு சென்றிருந்த நிலையில் கடந்த 20 ஆம் தேதி மதியம் திடீரென இறந்து போனார். இதுகுறித்து செந்தில்குமாரின் மனைவிக்கு தகவல் கொடுத்த ரிக் உரிமையாளர் மணிஅவரை மட்டும் ஆந்திரா அழைத்துச் சென்று பிரேத பரிசோதனை முடித்து உடலை செந்தில்குமாரின் தாய் வீடு உள்ள வட்டூர் கவுண்டம்பாளையம் பகுதிக்கு அனுப்பியுள்ளனர்.

செந்தில்குமார் இறப்பு குறித்து தகவல் அறிந்து அங்கு வந்த உறவினர்கள் செந்தில்குமாரின் இறப்பு குறித்து விசாரித்த போது முன்னுக்குப் பின் முரணான தகவல் கிடைக்கவே செந்தில்குமார் சாவில் சந்தேகம் இருப்பதாகக் கூறி செந்தில்குமாரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் உடல் வந்த ஆம்புலன்ஸ் உடன் அத்தி மரப்பட்டியில் உள்ள ரிக் உரிமையாளர் மணியின் வீட்டுக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த நாமக்கல் மாவட்ட கூடுதல் கண்காணிப்பாளர் சண்முகம், திருச்செங்கோடு உட்கோட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் சீனிவாசன் ஆகியோர் மணியின் வீட்டிற்கு வந்து செந்தில்குமாரின் உறவினர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இறந்து போன மணியின் உடல் ஆந்திர மாநிலத்தில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு இருப்பதால் பிரேத பரிசோதனை அறிக்கை வந்ததற்குப் பிறகு அதில் ஏதாவது தவறு இருக்குமானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்ததன் பேரில் செந்தில்குமாரின் உறவினர்கள் கலைந்து சென்றனர். இந்த சம்பவத்தால் வட்டூர் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

HAKIM CARE & CURE
(Acupuncture & Foot Reflexology, Hijama, Dorn)
அக்குபஞ்சர் - இயற்கை பாத அழுத்த சிகிச்சை, ஹிஜாமா, டான்

## வி ஜி விகாஸ் பள்ளியில்

# பூமி தின ஓவியப் போட்டிகள்




**ராசிபுரம், ஏப்ரல் 23:** இந்திய அஞ்சல் துறை சார்பாக பூமி தினத்தை முன்னிட்டு மல்லூர் வீ.ஜி. விகாஸ் பப்ளிக் பள்ளியில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஓவியப் போட்டி மற்றும் சுவரொட்டி தயாரித்தல் போட்டி நடைபெற்றது.

ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்ட இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பள்ளியின் முதன்மை செயல் அலுவலர் திருநாவுக்கரசு பரிசுகளும் சான்றிதழும் வழங்கினார். நிர்வாக அலுவலர் வினோத்குமார் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்து கூறினார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ராபின் கங்கவர்த்தனன், இந்திய அஞ்சல் துறை, உடனிருந்தார்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே ! வாழ்க வளமுடன் மருந்தில்லா மருத்துவம் !

Hr.A.H.ஷாகுல் அமீத் DAT (Acu), MD (Acu)

94433 86129
96003 86129

HAKIM CARE & CURE

(Acupuncture & Foot Reflexology, Hijama, Dorn)

அக்குபஞ்சர் - இயற்கை பாத அழுத்த சிகிச்சை, ஹிஜாமா, டான்



சிகிச்சை அளிக்கப்படும் நோய்கள்

இருதயம், நுரையீரல், ஜீரண மண்டல நோய்கள், கொலஸ்ட்ரால், தைராய்டு, பித்தப்பை கல், சிறுநீரகக்கல், சிறுநீரக நோய்கள், வாதம், ஒற்றைத்தலைவலி, சர்க்கரை நோய், கால் மரத்துப் போதல், எரிச்சல், ஆண்மைக்குறைவு, ஆறாத புண், தலைவலி, கழுத்துவலி, இடுப்பு வலி, முழங்கால் வீக்கம், தலைமுடி உதிர்தல், முகப்பரு, கண்நோய்கள், தோள்பட்டை வலி, அல்சர், அஜீரணக்கோளாறுகள், மூலம், மலச்சிக்கல், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், மாதவிடாய்ப்பிரச்சனைகள், சினைப்பை நீர்க்கட்டி, மனம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் போன்ற நோய்களுக்கு சீன அக்குபஞ்சர் மற்றும் அக்குபிரஷர், ஹிஜாமா முறையில் சிகிச்சை அளிக்கப்படும். மேலும் மனநலம் பாதித்தவர்களுக்கு ரெய்கி மற்றும் ஹிப்னாடிசம் முறையில் குணப்படுத்த ஆலோசனைகள் வழங்கப்படும்.

# பேருந்து மோதி விபத்து

## ஒருவர் மருத்துவமனையில் அனுமதி

**நாமக்கல், ஏப்ரல் 23:** சேலம் திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் தனியார் பேருந்து சேலம் நோக்கி வந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக இரு சக்கர வாகனத்தில் வந்த ஒருவரின் மீது பின்புறமாக மோதியதில் பலத்த காயங்களுடன் அவர் அருகில் இருந்த தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தகவல் அறிந்து சம்பவ இடம் வந்த நல்லூர் காவல்துறையினர் பேருந்து ஓட்டுனர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

---

# அதிக விலைக்கு மது விற்ற இருவர் கைது




**குமாரபாளையம், ஏப்ரல் 23:** குமாரபாளையத்தில் அதிக விலைக்கு மது விற்ற நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். குமாரபாளையத்தில் அரசு மது அதிக விலைக்கு விற்பதாக குமாரபாளையம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, காவல் ஆய்வாளர் தவமணி, காவல் உதவி ஆய்வாளர் தங்கவடிவேல் தலைமையில் தீவிர ரோந்து பணி மேற்கொண்டனர். சரவணா தியேட்டர், ஆனங்கூர் பிரிவு பகுதியில் அதிக விலைக்கு மது விற்பதாக அறிந்து, நேரில் சென்றனர்.

அங்கு அதிக விலைக்கு அரசு மது விற்றுக்கொண்டிருந்த பஷரப்புல்லா, (23), வேணுகோபால், (54)ஆகிய இருவரை போலீசார் கைது செய்தனர். இது குறித்து குமாரபாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே ! வாழ்க வளமுடன் மருந்தில்லா மருத்துவம் !

# HAKIM CARE & CURE

## (Acupuncture & Foot Reflexology, Hijama, Dorn)

# அக்கீம் கேர் & க்யூர்

## அக்குபஞ்சர் - இயற்கை பாத அழுத்த சிகிச்சை, ஹிஜாமா, டான்



### சிகிச்சை அளிக்கப்படும் நோய்கள்

இருதயம், நுரையீரல், ஜீரண மண்டல நோய்கள், கொலஸ்ட்ரால், தைராய்டு, பித்தப்பை கல், சிறுநீரகக்கல், சிறுநீரக நோய்கள், வாதம், ஒற்றைத்தலைவலி, சர்க்கரை நோய், கால் மரத்துப் போதல், எரிச்சல், ஆண்மைக்குறைவு, ஆறாத புண், தலைவலி, கழுத்துவலி, இடுப்பு வலி, முழங்கால் வீக்கம், தலைமுடி உதிர்தல், முகப்பரு, கண்நோய்கள், தோள்பட்டை வலி, அல்சர், அஜீரணக்கோளாறுகள், மூலம், மலச்சிக்கல், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், மாதவிடாய்ப் பிரச்சனைகள், சினைப்பை நீர்க்கட்டி, மனம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் போன்ற நோய்களுக்கு சீன அக்குபஞ்சர் மற்றும் அக்குபிரஷர், ஹிஜாமா முறையில் சிகிச்சை அளிக்கப்படும். மேலும் மனநலம் பாதித்தவர்களுக்கு ரெய்கி மற்றும் ஹிப்னாடிசம் முறையில் குணப்படுத்த ஆலோசனைகள் வழங்கப்படும்.

Hr.A.H.ஷாகுல் அமீத் DAT (Acu), MD (Acu)

94433 86129, 96003 86129

ஆஞ்சநேயர் கோவில் தெரு, கோட்டை திப்புசுல்தான் பள்ளிவாசல் எதிரில், நாமக்கல்.

# இளநீர் வியாபாரி விஷமருந்தி சாவு



**குமாரபாளையம், ஏப்ரல் 23:** குமாரபாளையத்தில் இளநீர் வியாபாரி விபத்து புண் வலி தாங்காமல் விஷமருந்தி இறந்தார். குமாரபாளையம் கத்தேரி பிரிவு பகுதியில் இளநீர் வியாபாரம் செய்து வந்தவர் முத்துசாமி. இவரது மனைவி பாப்பாத்தி. இருவருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக, பாப்பாத்தி, காளியண்ணன் நகர்ப் பகுதியிலும், முத்துசாமி கத்தேரி பிரிவு பகுதியிலும் நான்கு ஆண்டுகளாக தனித்தனியாக வசித்து வந்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், சாலை விபத்தில் இரு கால்களிலும் பலத்த காயமடைந்த முத்துசாமி, சிகிச்சை பெற்று வந்தார். வலி தாங்காமல் நேற்றுமுன்தினம் கத்தேரி பிரிவு பகுதியில் மாலை 05:30 மணியளவில் மயங்கி கிடந்தார். இவரை பாப்பாத்தியும், அவரது மகனும் தனியார் ஆம்புலன்ஸ் மூலம், ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர்.

இவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு 07:45 மணியளவில் இறந்தார். இவர் வலி தாங்கமுடியாமல் ஏதோ விஷமருந்தியுள்ளார் என மருத்துவர் கூறினார். இது குறித்து குமாரபாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.


---

## கிரீன் குலோப் சார்பில்

# ரத்த தான முகாம்

**ஷார்ஜா, ஏப்ரல் 23:** வரும் 25ஆம் தேதி கிரீன் ரோப் அமைப்பு சார்பில் ஷார்ஜாவில் ரத்ததான முகாம் நடைபெற உள்ளது. ஒவ்வொரு இரத்தத் துளியும் முக்கியமானது, உங்கள் முன்னெடுப்பு பல உயிர்களுக்கு நம்பிக்கையைத் தரும்.

இந்த உன்னத நோக்கத்தில் சேர்ந்து மற்றவர்களை ஊக்குவிப்போம்! இரத்ததான முகாமில் கலந்து கொண்டு பல




உயிர்களை காக்க எங்களுடன் கை கொடுங்கள் என்று கிரீன் கிலோ அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

## திமுக மாணவரணி சார்பில்

# விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் விநியோகம்



**பரமத்திவேலூர், ஏப்ரல் 23:** மத்திய அரசு மற்றும் அதிமுகவின் செயல்பாடுகள் குறித்த திமுக சார்பில் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கினர். நாமக்கல் மாவட்ட திமுக மாணவரணி சார்பில் பரமத்திவேலூரில் மத்திய அரசு மற்றும் அதிமுகவின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபாகரன் தலைமை வாங்கித்தார். பரமத்திவேலூர் பேரூர் திமுக செயலாளர் முருகன் முன்னிலை வகித்தார். நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கே எஸ். மூர்த்தி சிறப்பு அழைப்பளராக கலந்துகொண்டு துண்டு பிரசுரம் வழங்கள் வழங்கினார்.

பொதுமக்களிடையே பரமத்தி வேலூர் பேருந்து நிலையத்தில் பா.ஜ.க வோடு கூட்டணி வைத்துக்கொண்டு அ.தி.மு.க., நடத்தும் நீட் தேர்வு குறித்த அரசியல் நாடகத்தைக் கண்டித்து, மாவட்ட தி.மு.க., மாணவர் அணியினர் பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்துஇருந்த பயணிகள், பேருந்துகளில் அமர்ந்திருந்த பயணிகள், ஓட்டுநர்கள், நடத்துனர்கள், மாணவ, மாணவிகள், பேருந்து நிலையத்தில் வைத்துள்ள பல்வேறு கடைக்காரர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் ஆகியோரிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கி பிரச்சாரம் செய்தனர்.

பரமத்திவேலூர் பேருந்து நிலையத்தில் தொடங்கிய பிரச்சாரம் முக்கிய வீதிகள் மற்றும் திருவள்ளுவர் சாலை வழியாக நான்கு ரோடு வரை சாலையில் நடந்து வரும் பொதுமக்கள் சாலையின் இருபுறமும் உள்ள கடைக்காரர்கள் ஆகியோர்களிடம் துண்டு பிரசங்கங்களை கொடுத்தனர்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் கண்ணன், நாமக்கல் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி தலைவர் மூர்த்தி என்கிற முரளி,நாமக்கல் மாவட்ட வழக்கறிஞர்கள் அணி துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் செந்தில்குமார், வழக்கறிஞர் பாலகிருஷ்ணன், நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பூக்கடை சுந்தர், நவலடிராஜா, பரமத்தி வேலூர் பேரூராட்சி துணைத் தலைவர் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாமக்கல் மேற்கு

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன், வரவேற்றார்.

விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் பரமத்திவேலூர் பேரூர் கழக துணைச் செயலாளர் செந்தில்குமார், பேரூர் கழக நகர அவைத் தலைவர் மதியழகன் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர்கள், மாணவரணி மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு பொறுப்பாளர்கள், வார்டு செயலாளர்கள், மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக பொறுப்பாளர்கள், பல்வேறு அணி பொறுப்பாளர்கள், மகளிர் அணி பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

# வழித்தடம் விவகாரம், முத்தரப்பு பேச்சு வார்த்தை



**குமாரபாளையம், ஏப்ரல் 23**: குமாரபாளையத்தில் வழித்தடம் விவகாரம் சம்பந்தமாக முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. குமாரபாளையம் அருகே தட்டான்குட்டை ஊராட்சி, வீரப்பம்பாளையம், வேளாங்காடு பகுதியில் ஒரு சமுதாயத்தினர், அவர்களது குடும்பங்களை சேர்ந்த சுமார் 100க்கும் மேற்பட்ட இறந்தவர்கள் நினைவாக, மற்றொரு சமுதாய நபர் ஒருவரின் பட்டா நிலத்தில் நினைவுக்கல் வைத்து வழிபட்டு வந்தனர்.

இதற்கு நில உரிமையாளர் மற்றும் அவரது சமுதாயத்தினர், கல் வைத்த நபர்களிடம் தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர். நட்டு வைத்த நினைவு கற்களை அகற்றுமாறு போலீசில் புகார் கொடுத்து, அந்த பிரச்னை தீராத நிலையில், மீண்டும் அதே

இடத்தில் நினைவுக்கல் வைத்து வழிபடுகிறோம் என்று கூறி, 75க்கும் மேற்பட்டவர்கள் திரண்டனர். இது சம்பந்தமாக திருச்செங்கோடு ஆர்.டி.ஒ. அலுவலகத்தில், ஆர்.டி.ஓ. சுகந்தி தலைமையில் பல கட்ட பேச்சுவார்த்தையில் சுமுக தீர்வு ஏற்பட்டது. ஆனால் இடம் ஆய்வுக்கு சென்ற அதிகாரிகள் வசம் ஒரு தரப்பினர் தங்கள் ஆட்சேபனையை தெரிவித்தனர்.

நேற்று மீண்டும் சமரச பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுக்கு நில அளவீடு செய்து, அவர்கள் கேட்டபடி வழங்கப்பட்டது. தற்போது ஒரு தரப்பினர் தங்கள் பகுதிக்கு செல்ல வழித்தடம் கேட்டு வருகின்றனர். இது குறித்து ஆர்.டி.ஓ. சுகந்தி, தாசில்தார் சிவகுமார் உள்ளிட்ட வருவாய்த்துறையினர் நேரில் சென்று ஆய்வு செய்தனர். இதன் பின் தாசில்தார் அலுவலகத்தில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதுகுறித்து வட்டாட்சியர் சிவக்குமார் கூறும் பொழுது நடைபெற்றது முத்தரப்பு பேச்சு வார்த்தை இல்லை நீதிமன்ற உத்தரவின் பேரில் இரு தரப்பினரிடம் இருந்து விளக்கம் கேட்டு கடிதம் பெறப்பட்டுள்ளது இது குறித்து மேல் நடவடிக்கை வருவாய் கோட்டாட்சியர் மேற்கொள்வார் என தெரிவித்தார்.

இது குறித்து விவசாயி விஸ்வநாதன் கூறியதாவது: ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் வழித்தடம் கேட்டு வருகின்றனர். காலம் காலமாக அவ்வழியாக சென்று வருதாகவும் கூறி வருகின்றனர். இது தவறான தகவல். இது குறித்து ஆர்.டி.ஓ. சுகந்தி, தாசில்தார் சிவகுமார் ஆகியோர் நேரில் வந்து ஆய்வு செய்தனர். தாசில்தார் அலுவலகத்தில் நடந்த பேச்சுவார்த்தை முடிவில், நீங்கள் கேட்கும் வழித்தடம் ஏற்கனவே சென்று வந்ததுதான் என ஆதாரத்துடன் எழுதி தர சொல்லி கேட்டனர்.

அதற்கு உரிய ஆதாரம் நாங்கள் கொடுத்து உள்ளோம். மற்றொரு தரப்பினர் ஆதாரம் இல்லை என கொடுத்துள்ளனர். இதன் அறிக்கை ஆர்.டி.ஒ.க்கு சமர்ப்பிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் இது குறித்து முடிவு செய்து கூறுவார். இவ்வாறு அவர் கூறினார்.

HAKIM CARE & CURE
(Acupuncture & Foot Reflexology, Hijama, Dorn)
அக்குபஞ்சர் - இயற்கை பாத அழுத்த சிகிச்சை, ஹிஜாமா, டான்

# நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில்
# ரூ.61 லட்சத்துக்கு பருத்தி ஏலம்!



**நாமக்கல், ஏப்ரல் 23:** நாமக்கல் திருச்செங்கோடு சாலையில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் செவ்வாய்க்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. அதன்படி கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு நாமக்கல், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், வேலகவுண்டம்பட்டி, புதுச்சத்திரம், எருமப்பட்டி, பவித்திரம், சேந்தமங்கலம் என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 2500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

இந்த பருத்தி மூட்டைகள் ரூ.61 லட்சத்துக்கு விற்பனையானது. ஆர்.சி.எச். ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.7 ஆயிரத்து 469 முதல் ரூ 8 ஆயிரத்து 433 வரையிலும், மட்ட ரகப் (கொட்டு) பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரத்து 089 முதல் ரூ.6 ஆயிரத்து 289 வரையிலும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை திருப்பூர், திண்டுக்கல், தேனி, சேலம், கொங்கணாபுரம், கோவை, அவினாசி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்துச் சென்றனர்.

HAKIM CARE & CURE
(Acupuncture & Foot Reflexology, Hijama, Dorn)
அக்கீம் கேர் & க்யூர்
அக்குபஞ்சர் - இயற்கை பாத அழுத்த சிகிச்சை, ஹிஜாமா, டான்

# மே. 15க்குள் தமிழில் பெயர்ப்பலகை வைக்க

# நகராட்சி அறிவுறுத்தல்




**குமாரபாளையம், ஏப்ரல் 23:** குமாரபாளையத்தில் மே. 15க்குள் தமிழில் பெயர்ப்பலகை வைக்க அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் நகராட்சி நிர்வாகம் சார்பில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குமாரபாளையம் நகராட்சி நிர்வாகம் சார்பில் வணிக நிறுவன உரிமையாளர்களுடன் ஆலோசனை கூட்டம் நகராட்சி ஆணையாளர் (பொ) அருள் தலைமையில் நடைபெற்றது. இதில் அருள் கூறியதாவது:

குமாரபாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வணிக நிறுவனங்களிலும், தமிழ்நாடு அரசின் உத்தரவுப்படி, தமிழில் பெயர்ப்பலகை வைக்க வேண்டும். இதை மீறும் வணிக நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். இதில் சுகாதார ஆய்வாளர் சந்தானகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

HAKIM CARE & CURE
(Acupuncture & Foot Reflexology, Hijama, Dorn)
அக்குபஞ்சர் - இயற்கை பாத அழுத்த சிகிச்சை, ஹிஜாமா, டான்

Founder & Editor A.H. Shahul Hameed, B - 53, TNHB Quarters, Maruthi Nagar, Namakkal Cell: 94433 86129